# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி
# அசல் வழக்கு எண். 210/2015

பெயர். ராஜி நாள். 08.06.2022

வா.சா.2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

சாட்சி சொல்ல நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. வழக்கறிஞர் அழைத்ததின் பேரில் சாட்சி சொல்கிறேன். வாதி கோவில் இடம் சம்பந்தமாக வழக்கு போட்டுள்ளார். வாதியின் பெயர் மகேஷ் ஆகும். பிரதிவாதிகளின் பெயர்கள் தெரியாது. கோவிலில் கடந்த 17 வருடங்களாக நாங்கள்தான் புலங்கிக்கொண்டு வருகிறோம். மகேஷ் கேட் போட்டார். அதனால் கவுண்டர் மற்றும் நாங்கள் அனைவரும் சேர்ந்து கோர்ட்டில் பார்த்துக் கொள்கிறோம் என்று கேஷ் போட்டோம். இந்த வழக்கை ஊர் பொதுமக்கள் அனைவரும் சேர்ந்து தர்மகர்த்தா மூலமாக தாக்கல் செய்துள்ளோம். தர்மகர்த்தா இறந்துவிட்டார். அவருடைய வாரிசையே தர்மகர்த்தாவாக நியமிப்பீர்களா அல்லது வேறு ஒரு நபரை நியமிப்பீர்களா என்றால், தர்மகர்த்தாவின் ஆண் வாரிசையே நாங்கள் ஊர் மக்கள் ஒன்று கூடி நியமித்துள்ளோம். கோவில் உள்ள இடம் குட்டியம்மா என்பவர் பெயரில் பட்டா உள்ளது. 1 ம் பிரதிவாதியின் தாயார் பெயர் குட்டியம்மா ஆகும்.

ஒப்பம் / ராஜி

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.